உ

கடவுள் துணை


# செந்தமிழ்

தொகுதி-௫௰.] விஜய-ஹு—தை-மீ [பகுதி-௩.

Vol. 50. January—February 1954. No. 3.


## சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்


திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.



(38-ம் பக்கத் தொடர்ச்சி)


சீவகன் பெயரின் செழும்பொருள் விளக்கம் இவ்வளவோடும் நின்றுவிடவில்லை. சீவித்தல் உடையவன் சீவகன் என்றாற்போலவே சீவிக்கச் செய்பவன் சீவகன் என்பதும் இலக்கண நெறியால் இனிதாக இசையும் பொருள். இது முன்னரே ஒருகால் மொழியப் பெற்றது. ஆயினும் இங்கு மீண்டும் நினைதல் வேண்டற்பாலது. தானும் வாழ்ந்து, தன்னொடு தொடர்புற்றார் பிறரையும் வாழ்வித்த பெருந்தகை வள்ளல் சீவகன் என்பது இதனாற் போந்ததாம். இப் பொருளும் அச்சொல்லில் இரட்டுறமொழிதல் உத்தியானே எய்துதல் உரித்து. சீவகன் குணத்தைச் சிறப்பிப்பதாலும், இலக்கணத்தோடு பொருந்துவதாலும் இதுவும் கொள்ளத்தக்கதன்றித் தள்ளத் தகுவதன்று.

நூலாசிரியரும் உரையாசிரியரும் இப் பொருளமைதியை நுண்ணிதின் உய்த்துணர வைத்தனர்; அன்றி வெளிப்பட விளம்பினாரல்லர்; ஆனாலும் காவியத் தலைவன் கதைநிகழ்ச்சிகள் பெரும்பாலன இதன் விவரணமாக விளங்குதல் வெள்ளிடைமலை. ஆகையால் அந்நிகழ்ச்சிகளும் சீவகன் பெயர்வாய்ப்புக்குச் சிறந்த காரணம் என்பதில் சிறிதும் தடையின்று.

இனி, இவ்வகைக் காரணங்கள் சில எடுத்துக்கோடற்கண்ணே இயம்பப் பெற்றன. தன்னை வளர்த்த அன்னை சுநந்தையின் அருந்துயர் களைந்து, அவள் சாதலுய்ந்து சீவிக்கச் செய்தவன் சீவகன். பின்னரும் அவள் பெற்ற மைந்தன் நந்தட்டனைச் சீவன்மகவாய்ச் சிறப்ப வாழ்விக்கவந்தவன் சீவகன். இவை பெயர்சூட்டுதற்கும் முந்திய செய்திகள். இவ்வாறே அதற்குப் பிந்தி நிகழ்ந்த பெயர்க் காரணமும் பல.

அச்சணந்தி ஆசிரியர்க்கு யானைத்தீநோய் கெடுத்து, நல்வாழ்வு நல்கினவன் சீவகன். இயக்கர் தலைவன் சுதஞ்சணனுக்கு நாயுடம்பு நீங்க நல்லுடம்பு தந்து, தேவனாக வாழச்செய்தவன் சீவகன். கொலைத்தொழில் குறித்த கடக்களிறடக்கி, குணமாலையை மணமாலைசூட்டி வாழ்வித்தவன் சீவகன். பாம்பு தீண்டிய பதுமையைப் பிழைப்பித்து, அவளுடன் வதுவைஅயர்ந்து வாழப்புரந்தவன் சீவகன். இன்னோரன்னவை பின்னரும் உள சில. இவையனைத்தும் நாமகரணத்தின் முன்னும் பின்னும் நடைபெற்ற காரணங்களாய், முன்னையனபோலவே, சீவகப்பெயரிற் சிக்கநோக்கானே செறிந்து திகழ்வன. இவ் அதிசய வாய்ப்பும் அருமையுடைத்தன்றே?

இனி இக் காரணங்களுக்கு அடிப்படையான, சீவிக்கச் செய்பவன் சீவகன் என்ற இப்பொருள், உரையாசிரியரும் நூலாசிரியரும் உடன்பட்டதே எனற்கு அவர் குறிப்பு இரண்டொன்று இங்கே எடுத்துக்காட்டல் இயைவதாம். குணமாலையாரிலம்பகத்தில்

திருந்துவேல் சீவக சாமியோ வெனும்
கருங்கடல் வெள்வளை கழல்பவோ வெனும் (1027)

என வருவது கற்றார் பலரும் அறிந்தது. அசனிவேகம் என்னும் யானை குணமாலையின் உயிரைக் கொல்லாமற் காத்துச் சீவகன் நீங்கினபோது, அவள் அவன்மீது காதல்கைம்மிக்கு ஆற்றியது இது. இதற்கு உரையிட்ட நச்சினார்க்கினியர், 'சீவகசாமி! வளைகழல அமையுமோ?' என்று எழுதி, 'உயிரைக் காத்த வருத்தம் உடம்பைக் காத்தற்கு அரிதோ?' என்பாள் வளைகழல்பவோ? என்றாள் என விளக்கவுரையும் வரைந்தனர். இதனால் சீவகன் என்ற பெயரில், உயிரைக் காத்தவன் என்ற பொருளை உய்த்துணரவைத்தனர் நூலாசிரியரும் உரையாசிரியரும் என்பது நுண்ணிதின் விளங்கும்,

இன்னும் பதுமையாரிலம்பகத்தில் இப்பொருளைச் சிறிது தெளிவாகவே கூறியுள்ளார் திருத்தக்கதேவர்.

வரையே புனலே வழையே தழையே
விரையார் பொழிலே விரிவெண் ணிலவே
உரையீர் உயிர்காவலன் உள்வழியே. (1376)

என்பது அச் செய்யுளின் பகுதி. பாம்புதீண்டின பதுமை உயிர் காத்து அவளைப் புதுமணம் புணர்ந்து சின்னாள் தங்கிச் சீவகன் நீங்கியபோது, அவள் ஆற்றாமையால் அரற்றியது இது. இங்கே சீவகன் என்ற பெயரையே 'உயிர்காவலன்' என்று சொற்பொருள் விரித்தலாகத் தேவர் வழங்கின ரென்பது தெள்ளிதின் உணரப் படும். மேலும் இங்ஙனம் எடுத்துக் காட்ட வுரியன மிகவுள. அவையெல்லாம் அவ்வவ்விடத்தே விரிவாக விளக்கம் பெறுதல் அமையும்.

தான் சீவிப்பவன், பிறரைச் சீவிக்கச் செய்பவன் என்ற இரு அடிப்படையிலும் எழுந்த பெயர்க்காரணம் எல்லாம் இங்ஙனம் ஒருவாறு தொகுத்துரைக்கப் பெற்றன. இக் காரணங்களின் விவரணமாய கதைநிகழ்ச்சிகளே காவியம் அடங்கலும் பரந்து விரிந்தன. ஆதலால் சிந்தாமணி முழுமையும் சீவகன் என்ற பெயரின் விரிபொருள் விளக்கமான அரியதொரு பேருரையாக அமைந்ததெனல் சிறிதும் இழுக்காது.

இவ்வாறு அளக்கலாகா அரும்பொருளனைத்தும் அடக்கிக் கொண்டு விளங்காநின்ற சீவகன் பிள்ளைப்பெயரின் சிறப்புக் கூற வந்த சிந்தாமணி கவி,

போற்றித் தந்த புண்ணியர் கூடிப் புகழோனைச்
சீற்றத் துப்பிற் சீவகனென்றே பெயரிட்டார். (361)

எனக் கேட்பார்எல்லார்க்கும் இனிமைமிகப் பாடித் தாமும் இன்ப முறுகின்றார். ஆசிரியர் ஈண்டுப் பெய்துவைத்த ஏகார இடைச் சொல்லின் ஆற்றல்தான் எத்தனைத்தென்று எடுத்துரைக்க இயலுமோ? இவ்வடிகளை எத்தனைதரம் திரும்பத்திரும்ப வாசித் தாலும் இன்பம் மாறாது.

தேனூற நின்று தெருண்டாரவை செப்ப லுற்றேன். (6)

என்று தேவர் தாம் பதிகத்தில் நுதலிப்புகுந்த உறுதி கடைப்பிடித்து ஒழுகும் திறம் என்னே! சீவகன் சரிதம் உரைக்கின்ற தம் நெஞ்சிலே நின்று தேனூறியாங்கு, கேட்கின்ற பிறர் நெஞ்சிலும் அப் பெற்றித்தாகவேண்டும் என்பது அவர் அவா. இவ் இருபொருளும் தோன்றவே அவர் அங்ஙனம் நுதலிப்புகுந்தார் என்னலாம்.

இன்னும் சீவகன் பெயர்சூட்டு வைபவப் பாடலில் 'கூற்றம் அஞ்சும் கொல்நுனை எஃகின் இளையான்' என்றது கந்துகனை. இதில் எஃகின் அடை, குழந்தையின் உயிர்காவலே அவன் குறிக்கோளாக இருந்தமை உணர்த்துவதில் கருத்துடையது. இது 'கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்' என்னும் திருப்பாவை (1) யை நினைப்பிக்கின்றது. தன் அன்பு மிகுதியாலே குமரனுக்கு என்னதீங்கு வருமோ என்றஞ்சி, வேலைக் கூராகக் கடைந்து பிடிக்கத் தொடங்கினன் நந்தகோபன் என அதன் குறிப்புப்பொருள் உரைக்கப் பெறுவதுண்டு. இங்கும் அவ்வாறே குறிப்புப் பொருள் கொள்ளத் தக்கதாம்.

இனி 'மாற்றம் அஞ்சும் மன்னிய கற்பின் மடவாள்' என்றது சுநந்தையை. இதில் கற்பின் அடை, குழந்தையின் காப்பில் அவளும் மிக்க குறிக்கோளா யிருந்தமை உணர்த்துவதில் கருத்துடையது. கணவன் எஃகுக் காவலையும் மனைவியின் கற்புக் காவல் விஞ்சியது என்பதாம். 'பேணிய கற்பும் பெருந்துணையாக' என்பது சிலப்பதிகாரம் (கொலைக். 87). அவன் படைக்கலக் காவல்-துணை; இவள் பத்தினிக் காவல்-பெருந்துணை என்றவாறு.

சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை (திருக். 57)

எனச் சிறைகாவலினும் நிறைகாவல் சிறந்ததாகக் கூறிய வள்ளுவனார்க்கும் இவ் வுண்மை உடன்பாடு. இக் குறட்கருத்தை இவ்வளவாக விரியாமல், கற்பின்மகளிர் தற்காப்பளவுக்கு மட்டுமேயாகப் பொருள்கொள்ளின் நிரம்பாது.

வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு (சிலப். அடைக். 145-7)

என வீடுமட்டுமன்றி நாடுமுழுதும் அவரால் நன்மை எய்தும் என்பர். அன்றியும் காவல் வேந்தருக்குங்கூடப் பிறிதொரு பெருங் காவலாய்ச் சிறந்து துணையாக வல்லது என, அக் கற்பின் பெருமை அறியற்பாற்று.

இனி, 'போற்றித் தந்த' என்றது, குழவியிடத்து இத்தகைய அன்பு பூண்டோர் இருவரும் மிகவிரும்பி அழைத்துக்கொடுவந்த என்றவாறு. 'புண்ணியர்' என்றது, அந்தணரும் சான்றோருமாகிய பெரியோரை. அவர் நிறைமொழி மாந்தர் என்ப. நிறைமொழி யாவது பொருள் நிரம்பிய சொல். அதனால் அத்தகையோர் வாய் மொழியான சீவகப்பெயரும் இத்துணைச் சிறந்த பொருள்களாற் பொலிவுறுவ தாயிற்று என்பது குறிப்பு.

'கூடி' என்றது, குழந்தையின் உறுப்பிலக்கணங்களைக் கண்டு அவர் ஒருவரின் ஒருவர் உசாவிப் பொருத்தமாகப் பெயரிட்டமை குறித்தவாறு.

'புகழோனைச் சிறத்தற்பிற் சீவகனென்றே பெயரிட்டார்' என்றது, சிறத்துப்பிற் புகழோனைச் சீவகனென்றே பெயரிட் டார் எனக் கூட்டி முடிக்கவேண்டும். ஏனெனில் அது நூல்கேட் பாரை நோக்கிய கவிக்கூற்றான கருத்துடை அடையாகின்றது. ஆதலின் உள்ளவாறே சிறத்துப்பிற் சீவகன் எனின், அது புண் ணியர் கூற்றுதற்குப் பொருந்தாது. அங்ஙனமாயின் அதில் கவிக் கூற்றான கருத்து யாதோ எனில், கட்டியங்காரனால் விளையும் இடரெல்லாங் கடந்து அவனைச் சீறிக் கொல்லவல்ல சீர்த்தியுடையோன் என்பதாம். இது மேல்நிகழவிருந்த சீவகன்கதையை உட்கொண்டு கூறியது. இங்குப் 'புகழோன்' என்றது, புகழுக்குரியோன் என்ற வாறு. காரணமாகிய உரிமை காரியமாகிய புகழைப் பயந்தேவிடும் எனல் துணிபு.

இதனால் மேல்விளைவாகும் சீவகன் பெயர்க் காரணங்களையும் ஆசிரியர் இங்குக் குறிப்பாக உடன்பட்டாராயிற்று. (கருவிலே பகையான கட்டியங்காரனையும் பிறரையும் கொன்று, சீவகன் சீவித்தலுடையனானதை வியந்து புகழ்ந்து அவனை விளிக்கின்ற விசயமாதேவி,

> செற்றவர்ச் செகுத்த வைவேல் சீவக சாமி என்றாள் (2609)

என முத்தியிலம்பகத்துவருதல் ஈண்டைக்கேற்ப நோக்கத்தக்கது. சிற்றத்துப்பிற் புகழோன் சீவகன் என்று இங்ஙனம் வித்தியதன் விளைவே, அங்குச் செற்றவர்ச் செகுத்த வைவேல் சீவகன் என்றது எனக் கற்றார் பலர்க்கும் தெற்றென விளங்கும். ஆயின் இப் பொருளை அங்கு உரையாளர் வெளிப்பட விரித்திலரே எனின், மாணுக்கர்க்கு அறிவுவளரவேண்டி உய்த்துணர வைத்தல் அவர்க் கியல்பு.

இனி, அடுத்துவரும் சிந்தாமணிச் செய்யுளும் இப் பொருட் குறிப்போடு பொருந்த, சீவகன் மறைந்து வளர்ந்த மர்மத்தை இனி தாக இசைத்துள்ளது. (கட்டியங்காரனைக் கொல்லக் கந்துகன் மனையில் சீவகன் வளர்ந்தது, கஞ்சனைக்கொல்ல நந்தகோபன் மனை யில் கண்ணன் மறைய வளர்ந்த மாயத்தோ டொத்ததாம்.

> போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல்
> மாகம் ஈன்ற மாமதி யன்னான் வளர்கின்றான் (362)

என்றது நோக்கத்தக்கது.

இங்குப் புண்ணியன் என்றது சிவபெருமானை. கணை என்றது கண்ணபிரானை. திரிபுரம் தீமடுத்த காலத்தில் சிவனுக்குக் கணை யாய் உதவினன் திருமால் என்பது புராண வரலாறு. அதனால் அத் திருமால் அவதாரமான கண்ணனை இங்குக் 'கணை' என்றார், திருமால் திரிபுரத் தசுரரைச் செகுத்தது போலவே, சீவகன் கட்டி யங்காரனைக் குறிக்கோள் பிழையாமல் கொல்லவல்லன் என்று கருத்து. போகம் ஈன்ற புண்ணியன் எய்த கணையேபோல் என்று விசேடித்தது, சச்சந்தமன்னன் தேவியின்போகத்திலே தினைத் துப்பெற்ற சீவகனாகிய மகவு, அவன் கட்டியங்காரனைக் கொல்லு தற்கு ஏவிய கடுங்கணைபோல மறைந்து வளரும் என உவமைநயம் கொள்ளற் கென்னலாம். இதுவும் மேல்விளைவான வரலாற்று நிகழ்ச்சியைக் கொண்டுகூறிய தாகலின் இங்ஙனம் அளப்பரிய ஆழமுடையதாயிற்று.

[தொடரும்]

உ

# சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

## வேளிர்முதலிய மரபினர்

இம்மூவேந்தர்களையன்றித் தமிழகத்தில் குறுநிலமன்னர்களாக வாழ்ந்தவர் பலருண்டு. அவர்கள், வேளிர், கோசர், ஆரியர், மோரியர், வடுகர், பாணர், நாகர், தொண்டையர் மரபினராவர். இம்மரபுகளிற் சேராதாரும் சிலருண்டு. இவர்களைப்பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுவனவற்றை இனிக் காண்போம்.

### வேளிர்

வேளிர் தொன்றுதொட்டுக் குறுநிலமன்னர்களாக விளங்கினவர்கள். "வேந்துவினையியற்கை வேந்தனின்றொரீஇய ஏனோர் மருங்கினும் எய்திடனுடைத்தே" என்னும் தொல்காப்பியச்சூத்திரம் "வேளிர்க்கும் வேந்தன்றொழி லுரித்தென்கிறது" என்று நச்சினார்க்கினியர் கூறுவது இக் கருத்தை விளக்கும். "தொன்று முதிர் வேளிர்", "தொன்முதிர் வேளிர்" (நற் 280, புற 24) என்னும் தொடர்களும் இதற்குச் சான்றாம். "வடநாட்டில், ஹாரீதபஞ்சசிகர் என்ற முனிவர் யாகம் செய்துகொண்டிருந்தபோது அவரது தீர்த்த பாத்திரத்திலிருந்து ஓரரசன் உண்டானான். அப் பாத்திரத்துக்குச் சுளுகம் என்பது வடமொழிப் பெயர். ஆதலின் அதினின்றும் தோற்றிய அம் மன்னனது மரபினர் சளுகர் எனப் பெயர்பெற்றனர். இச் சொல்லே சாளுக்கியர் எனத்திரிந்தது" (Bombay Gazetteer). இருங்கோவேளை நோக்கிக் கபிலர் கூறிய, "நீயே வட

பால்முனிவன் தடவினுட்டோன்றி" என்னும் தொடரும் (புறம் 201) இதற்குப் பழைய உரையாசிரியர் "வடநாட்டு முனிவனது யாகபாத்திரத்துத் தோன்றி" என உரைத்திருப்பதும் வேளிர் அச்சளுக்கிய மரபினராவரோ என்னும் ஐயத்தை எழுப்புகின்றன. வேளிருள் ஒருவன் 'புலிகடிமால்' எனக் குறிக்கப்படுகின்றான். ஆதலின் ஹொய்சளமரபினராவரோ என ஐயுறவும் இடனுண்டு. எனினும் இம்மரபினர் தொன்றுதொட்டுத் தமிழகத்தே வாழ்ந்தவரென்பதும் மூவேந்தரொடும் மணவினையிலும் தொடர்பு கொண்டவர் என்பதும் நாம் இலக்கியங்களா லறிவனவாம். "வியாவிழுப் புகழ் விண்தோய் வியன்குடை ஈரெழுவேளிர் இயைந்தொருங் கெறிந்த கழுவுள் காமூர்போல" (அகம் 135) "அடுபோர்வேளிர்" (அகம் 206) என்னும் தொடர்களால் அவர்களது வீரமும் புகழும் வெள்ளிடைமலையாம். நெல்வளம்மிக்க முத்தூறு, நீர்வளம்மிக்க மிழலை, வெள்ளுப்புவிளையும் வீரை, எயினன் வாழ்ந்த வாகை, நன்னனுக்குரிய பாழி முதலியன வேளிர் வாழ்ந்த இடங்களாம். கரிகாலன், கோசர்மரபினனாகிய திதியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், அஃதை முதலியோர் வேளிர் மரபினரொடு பொருதவர்களாவர்.

## ஆய் ஆண்டிரன்

இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன்; வேளிர்மரபினன்; சிறந்தவீரன்; இரவலர்க்கு இல்லை என்னாது வழங்குபவன்; பயன் கருதாது ஈதலையே கடனாகவுடையவன்; பாம்புதந்த நீலவுடையினைப் பரமசிவனுக்குத் தந்தவன்; பொதியின்மலை இவனுக்குரியது. இம்மலைக்கு அருகிலுள்ள ஆய்குடி என்பது இவனுடைய ஊர் ஆதல் வேண்டும்.

இவன் சுரபுன்னைப் பூமாலையை உடையவன்; கொங்கு நாட்டாரோடு போர்செய்து அவரைப் புறங்காட்டியோடச் செய்தவன்.

இவனைப்பாடிய புலவர்கள் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார் ஆவர்.

## தித்தன்

இவன் உறையூரிலிருந்த ஒரு மன்னன் (அகம் 6, [illegible]). சோழன் போரவைக்கோப்பெருநற்கிள்ளியுடன் பகைகொண்டவன். இவன் வெளியன் தித்தன் எனவும் பரணரால் குறிக்கப்படுகின்றான். முதுகூத்தனார் என்னும் புலவர் 'வீரைவேண்மான் வெளியன் தித்தன்' என ஒருவனைக் குறிக்கின்றார். இவ் விருமன்னரும் ஒருவராவரோ என்பது ஆய்வுக்குரியதே. எனினும், வெளியன் எனக் குறிக்கப்படுவதால் தித்தன் வேளிர்மரபினனாதல் வேண்டும். 'வெளியன்வேண்மான் ஆய்எயினன்' (அகம் 208) என்பதையும் நோக்குக. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தாய் 'வெளியன்வேண்மாள் நல்லினி' எனக் குறிக்கப்படுவதனால், இத்தித்தன் அவ்வுதியன் சேரலோடு உறவுடையவன் ஆவன். 'வெளியன்வேண்மான் ஆய் எயினன்' எனக் குறிக்கப்படுபவன் ஆய்மரபில்வந்தவனாதல்வேண்டும். ஆதலின், இந்த ஆய்எயினனும் தித்தனும் ஆய்ஆண்டிரனுக்கு மக்களாதல்வேண்டும் எனக்கருத இடனுண்டு. இவனைப் பாடிய புலவர்கள் சாத்தந்தையார், நக்கீரர், பரணர் ஆவர்.

## ஆய் எயினன்

இவன் ஓர் வள்ளல். இவனது ஊர் வாகை (புறம் 351). இவன் ஆய் (வேளிர்) மரபினன். இவன் வேளிர் மரபினனாகிய நன்னனுக்கு நண்பன். இவன் கோசனாகிய அதிகனைக் கொன்றனன். ஆதலின் நன்னனொடு அஃதை என்பான் பகைத்தெழ, அவன் அச்சத்தால் எதிர்வாராமையின், அஃதையின் படைத்துணைவனாகிய ஞிமிலி ஆய்எயினனுடன் போர்புரிய இவ் வெயினன் புண்பட்டு வீழ்ந்தனன். அது கண்டு பறவைகள் எல்லாம் அவனை ஒண்கதிர் தெறாதபடி நிழல்செய் துழன்றன. இறந்துபட்டதுணர்ந்த வேண்

மகளிர் அழுது பெரும்பூசலிட்டனர். அஃதை அம்மகளிரது பூசலைக் களைந்தனன்.

## நன்னன்

இவன் வேள்மரபினன் (அகம் 29); நன்னன் உதியன் என்றும் இவன் வழங்கப்படுவான்; கொண்கானத்து நன்னனும் இவனே (அகம் 154, 349 நற் 391). ஏழில்மலை இவனுக்குரியது. பாரமும் பாழியும் இவனுக்குரியன. ஏழிற்குன்றம் பொன்படுவரை (அகம் 175); பகைவரை வென்று பெறும் செல்வம்மிக்கது. இவனது நாடு தமிழ்நாட்டு எல்லையில் இருந்தது. இவன் நாட்டையடுத்தது சொல்பெயர் தேஎம் (அகம் 349). பாழியில் அருங்கலனையும் பொன்னையும் வேளிர் புதைத்து வைத்திருந்தனர். அவை பிறரால் கைப்பற்ற முடியாதனவா யிருந்தன.

பாண்டியன் வினைவலனும் கோசனுமாகிய அதிகன் என்பானை ஆய் எயினன் கொன்றனன். தன்னினத்தவனைக் கொன்றனன் என்பதற்காக அஃதை என்பான் நன்னனொடு போர்க்கெழுந்தனன். நன்னன் போர்க்கு வரவில்லை. நன்னனுக்காக எயினன் போர்க்கெழுந்தனன்; புண்பட்டு வீழ்ந்தனன். நாணத்தினால் நன்னன் வெளிவாராது அடங்கிக்கிடந்தான்.

நன்னன், தானே கனி தின்பதற்கென ஆற்றோரத்தில் ஓர் மாமரம் அருமையின் வளர்த்துப் போற்றிவந்தான். அஃது ஒரு காயே காய்த்தது. அது முற்றிய நிலையில் ஆற்றில் விழுந்தது. அக்காய் ஆற்றுப்புனலில் அலைப்புண்டுசெல்ல, அங்கே நீராடச்சென்ற ஒரு பெண், அது அரசனுக்குரியதென்பதறியாது எடுத்துண்டனள். இத் தவற்றிற்கு அவளது உற்றார் பல களிறுகளையும் பெண்ணின் நிறையான பொற்பாவையும் கொடுக்கவும் கொள்ளானாய் இரக்கமின்றி அப்பெண்ணைக் கொலைசெய்தனன் (குறுந் 292). இப்பசுங்காய் தின்றவள் கோசர்மகள். இக் கொடுஞ்செயலைப் பொறாத

கோசர், இக் கொடுஞ்செயலுக்குக் காரணமான மாமரத்தை அழித்தற்கு ஓர் சூழ்ச்சி செய்தனர்; தங்கள் தலைவனாகிய அஃதைபால் தங்கள் மகளிர்களை யனுப்பிப் பிடிகளைப் பரிசிலாகப் பெறச் செய்தனர்; பின்னர், அப்பிடிகளை, அம்மகளிரைக்கொண்டே நன்னன் தோட்டத்து மரங்களில் கட்டச்செய்தனர். மாமரத்தில் கட்டப்பெற்ற பிடிகள் தங்கள் தலையில் மண்ணைப் பெய்தற்குத் தரையைப் பறித்த நிலையில் மாமரம் வேரோடு ஆற்றில் சாய்ந்தது. அதனை நாட்டிலுள்ளாரெல்லாம் விறகிற்கு ஒடித்துப்போக மரமேயில்லாதுபோயிற்று (குறு 73). இச் செயலுக்குத் துணையாயிருந்தான் அஃதை என்பதை யுணர்ந்து அவன்மீது சினந்து போர்க்கெழுந்தான் நன்னன். கோசர் அஃதைக்குத் துணைசெய்து போற்றினர்.

இந் நன்னன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலால் கொல்லப்பட்டான் (அகம் 199). பூழிநாடு நார்முடிச்சேரலுக்குரியதாயிற்று.

## பாரி

இவன் ஓர் வள்ளல்; வேளிர் மரபினன்; பறம்பு நாட்டிற்குத் தலைவன். பறம்புமலை இந் நாட்டது. இவன் முல்லைக்கொடிக்குத் தேர்கொடுத்தவன்; தன்னுடைய முந்நூறு ஊரையும் பிறபொருள்களையும் பரிசிலர்க்கு வழங்கினன். அறமும் மறமும் வாய்ந்த இவனை வெல்லக்கருதிய தமிழ்நாட்டு மூவேந்தரும் இவனது பறம்பு மலையை முற்றுகை யிட்டனர். பாரி, அதனைப் பொருட்படுத்தாது வாளாவிருந்தான். பாரியின் உயிர்த்தோழராகிய கபிலர், அவ்வேந்தர்களைக்கண்டு, அவர்களால் பாரியை வெல்லமுடியாது என்பதனை நன்குணர்த்தினார். பின்னர், அவ்வேந்தர்கள் பாரியை வஞ்சித்துக் கொன்றனர்.

பாரி இறந்தபின்பு, நண்பராகிய கபிலர் இவன் இருமகளிரை மணஞ்செய்துகொள்ளும்படி விச்சிக்கோனையும் இருங்கோவேளை யும் வேண்டினர். அவர்கள் மறுக்கவே அம்மகளிரைப் பார்ப்பார் பாற்படுத்தி, வடக்கிருக்கச் சென்றார்.

## வேள் ஆவி

இவன் நெடுவேளாவி எனப்படுவான்; பொதினிமலைத் தலைவன். மழவரை வென்றவன் (அகம் 1, 61). பொன்னுடை நெடுநகர்ப் பொதினி இவனது தலைநகரம். "வேளாவிக் கோமான் பதுமன்" எனக் குறிக்கப்படுபவன் இவனுவனே என்பது ஆய்வுக்குரியது.

## பேகன்

இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன்; வையாவிக் கோப் பெரும்பேகன் எனக் குறிக்கப்படுபவன்; வேளாவியின் மரபினுவன். இவன் ஓர்நாள் உவகையின் மிகுதியால் காட்டில் ஆடிக் கொண்டிருந்த மயிலைக்கண்டு, தனது இயல்பான தண்ணளியினால் உடாஅ, போரா வாகுதலறிந்தும் மடத்தகை மாமயில் பனிக்கு மென்றருளிப் படாஅம் ஈந்தனன். இவன் கொடைமடம் உடைய வன்; படைமடம் படாதவன். இவ் வள்ளலாகிய பேகன் தன் மனைவி கண்ணகியை விட்டு நீங்கிப் பொதுமக ளொருத்தியொடு வாழ்ந்துவந்த காலத்தில் அச்செய்தியை யுணர்ந்த பரணர், கபிலர் முதலிய புலவர்கள் இவனையடைந்து முன்போல் தன் காதலியுடன் வாழுமாறு வேண்டினர். இவன் மறுமை கருதாது வழங்கும் வள்ளல்.

## இருங்கோவேள்

இவன், ஒரு முனிவருடைய ஓமகுண்டத்தே தோன்றித் துவ ராபதியை ஆண்டு நாற்பத்தொன்பது தலைமுறை தொன்றுதொட்டு

வந்த வேளிருள் ஒருவன். இவன் தவஞ்செய்துகொண்டிருந்த ஒரு பெரியார்க்குத் தீங்கிழைக்கவந்த புலியைக் கடிந்தமையான், இவன் புலிகடிமால் எனப்பட்டான். இவனுடைய முன்னோர்களுள் ஒருவன் கழாத்தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததனால், இவரது தலைநகராகிய அரையம் அழிந்துபட்டது. "பொன்படு மால்வரைக் கிழவ", "பெருங்கல் வைப்பின் நாடுகிழவோயே" (புறம் 201, 202) எனக் குறிக்கப்படுதலால் இவனதுநாடு வளர்தரு மலையுடையதாம். இருங்குன்று எனப்படும் திருமாலிருஞ்சோலைமலை இவனுக்குரியதோ என்பது ஆய்வுக்குரியது.

கபிலர் பாரிமகளிரை மணம்புரிந்து கொள்ளும்படி வேண்ட இவன் மறுத்துவிட்டான். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனோடு எதிர்த்துப் பொருதுபட்டவன் இவன் (அகம் 36). குராப்பள்ளித் துஞ்சிய திருமாவளவன் காலத்தவனாகிய இருங்கோவேள், இவனினும் வேறானவனாதல் வேண்டும்.

## விச்சிக்கோ

இவன் சிற்றரசருள் ஒருவன்; நன்னன் மாபினன்; ஆதலின் வேளிர் குலத்தவன். கபிலர், பாரிமகளிரை மணந்துகொள்ளும்படி வேண்ட இவன் மறுத்துவிட்டான். இவன் குடக்கோச் சேரலிரும்பொறையால் வெல்லப்பட்டவன். குறும்பூர் என்றவிடத்து வேந்தரோடு பொருது வெற்றிகண்டனன் (குறுந் 325). குறும்பூரில் எவ்வேந்தரொடு பொருதனன் என்பது விளங்கவில்லை. இவனுக்கோர் இளவலுண்டு; அவன் இளவிச்சிக்கோ எனப்படுவான்.

பெருஞ்சாத்தனார் என்னும் புலவர், தன்னுடனிருந்த இளங்கண்டீரக் கோவைப் புல்லித் தன்னைப் புல்லாதொழிய, இவ்விச்சிக்கோ காரணம் என்னென வினவ, அப் புலவர்பெருமான்,

இவன் பெண்கொலைபுரிந்த நன்னன் மரபினனென்றும் இவனுடைய முன்னோர் புலவர்க் கியாதவர் என்றும் உரைத்தார். முன்னோர் செயுங் குற்றம் பின்னோரையும் தாக்குகின்றது என்பதும் பழிக்கப் படாத வாழ்வு வேண்டும் என்பதும் இதனாற் புலனும்.

## வேள் எவ்வி

இவன் வேளிர் மரபினன்; யாழிசை மறுகின் நீடூர்கிழவன் (அகம் 266). நீழல் என்னும் ஊர் இவனுடையது (அகம் 366). எவ்வியினது குடி மிகத் தொன்மையானது. இவன் பசும்பூண் பாண்டியனது ஆணையை ஏற்று அடங்கி நடவாது மிடலொடு விளங்கினன். ஆதலின், எவ்விக்கும் தலையாலங்கானத்துச் செரு வென்ற பசும்பூண்பாண்டியனுக்கும் போர்மூண்டது. அப்போரில் எவ்வியை எதிர்த்துநின்ற கோசர்மரபினனாகிய அஃதை ஊறுபடாது நின்றனன் எனினும், அவன் திகிரியால் புண்பட்டு வீழ்ந்தனன் என்ற குரல் எழுந்தது. மறுநாள் எவ்வி புண்பட்டு வீழ்ந்தனன் (அகம் 266, புறம் 233). பாண்டியன் இவனது மிழலைக் கூற்றத்தைக் கவர்ந்தனன் (புறம் 24).

அன்னி என்பான் இவ் எவ்வியின் சொல்லைக் கேளாமல் திதியன் என்னும் கோசர்தலைவனொடு பொருதனன். திதியன் அன்னிக்குரிய குறுக்கைப் பறந்தலையில் அவனுக்குரிய புன்னை மரத்தை யழித்து வெற்றிகொண்டனன் (அகம் 45, 126, 145).

[தொடரும்]

## பிழைதிருத்தம்

தொகுதி 49, பக்கம் 71-ல்; 'நன்னன் படைத்தலைவனாகிய ஞிமிலி என்பான் அதிகனைக் கொன்ற வரலாற்றையும்' என்பதை, நன்னன் படைத்தலைவனாகிய அதிகனை ஞிமிலி என்பான் கொன்ற வரலாற்றையும் என்று திருத்திக் கொள்ள வேண்டும்.

# உள்ளுறை

வித்துவான் திரு. K. S. விசுவநாதசாஸ்திரி அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

(54-ம் பக்கத் தொடர்ச்சி)

## IV நகை

இனி அடுத்த உள்ளுறையாக நிற்பது நகை. நகை என்பது எண்வகை மெய்ப்பாடுகளுள் முதலதாகக் காணப்படுவது.

"[1]நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப"

என மெய்ப்பாடுகள் எட்டும் எண்ணப் படுகின்றன. இவையே யன்றி உடைமை முதலாய எனைத்துணை மெய்ப்பாடுகளும் பல மெய்ப்பாட்டியலுள் கூறப்படுகின்றன. இவையனைத்தும்,

"[2]உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பதாந் தன்மைய"

வாதலின் அவ்வம் மெய்ப்பாட்டிற்குரிய பொருளமைப்பின் வாயிலாகப் புலப்படுத்தற் குரியனவே. இந்நிலையிலேயே இவை உள்ளுறையாவதும். இம்மெய்ப்பாடுகள் பலவற்றையுங் கொள்வதற்கே நகை என்பது முதற் குறிப்பாக நிற்கின்றது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பனபோல. இன்றேல் நகை ஒன்றே உள்ளுறையாவதென்று கருத நேரிடும். உள்ளுறையாகின்ற தன்மை மெய்ப்பாடு பலவற்றிற்கும் பொதுவியல்பே. இவ்வியல்பு கருதாது நகை ஒன்றுமட்டுமே உள்ளுறை என்று கொள்வோமாயின், அது மெய்ப்பாட்டினியல்பை முற்ற வுணர்ந்ததாகாது. உரைகாரர்களின் கருத்தின்படி நகையாடிப் பகற்குறி மறுத்தல் போல்வது நகை என்ற உள்ளுறை என்று கொண்டால், 'இலங்கு மருவித்து இலங்கு மருவித்தே' என வரும் புதுமை வியந்து வெறுத்தல் போல்வதும் புதுமை என்ற உள்ளுறையாதல் வேண்டும். இவ்வாறே உள்ளுறையும் பல்கிச்செல்லும். ஐந்தென வரையறுத்தலும் இயலாது.

---

[1] தொல். மெய்ப். 1  [2] தொல். செய்.

நகை முதலிய மெய்ப்பாடுகள் பலவும் அவ்வவற்றிற்குரிய மெய்ப்பாட்டுப் பொருள்களின் வாயிலாகப் புலப்படுவனவே. அவ்வியல்பின் காரணமாகவே அவை உள்ளுறை என்று கொள்ளப்படுகின்றன. இவ் வியல்பின் விளக்கத்தைச் [1] 'சுவைத்தொனி' என்ற தலைப்பிற் காண்க. தொல்காப்பியர் மெய்ப்பாடனைத்தையும் உள்ளுறையாகக் கருதி இருப்பாராணுல் வெளிப்படையாகவே மொழிந்திருக்கமாட்டாரா? முதற்குறிப்பால் அதற்குப் பெயரிடுதல் எதற்காக? எனின், ஆம். அவ்வாறுதான் கூறி இருத்தல் வேண்டும். ஆயினும் நகை முதலாய அந்தந்த மெய்ப்பாடும் உள்ளுறையாமிடத்து அந்தந்த மெய்ப்பாட்டின் பெயராலேயே அவ்வுள்ளுறை வழங்கப்பட வேண்டுமென்பது அவர் கருத்து. இக் கருத்தினுலேயே இக் குறியீடும் அதற்கு வழங்கப் பெறுகின்றது. உடனுறைவதொன்று உள்ளுறையாக வருவதை உடனுறை என்றது போலவும், உவமம் உள்ளுறையாகக் கொண்டதை 'உவமம்' என்றும் போலவும், சுட்டை உள்ளுறையாகக் கொண்டதைச் சுட்டு என்றது போலவும், நகை முதலாய மெய்ப்பாட்டை உள்ளுறையாகக் கொண்டதையும் 'நகை' என்று வழங்கி இருக்கிறுர். இறைச்சி என்பது மட்டும் இம் முறைக்கு மாறுபது. அதற்குக் காரணம் 'இறைச்சியும் சுட்டும்' எனு இடத்திற் கூறப்பட்டது. உள்ளுறைந்த வற்றின் இயல்பை ஆராய்ந்து உள்ளுறை ஐந்தென்றதே தவிர, அவ் வுள்ளுறை, களுக்கு இடமாவனவற்றைக் கொண்டு செய்த பாகுபாடன்று இப் பாகுபாடு. இன்றேல் ஐந்தெனப் பகுத்தலும் இயலாது.

## V சிறப்பு

இனிச் சிறப்பு என்பதொன்று எஞ்சி நிற்கின்றது. இப் பெயாற் குறிக்கத் தகுவதொன்று உள்ளுறைந்து நிற்றலின் இவ் வுள்ளுறைக்கு இப் பெயரிடப் பெற்றிருக்கின்றது. அஃதியாதென்று கண்டறிதல் வேண்டும். சிறப்பு முதலியன உவமந் தோன்றுதற்கு நிலைக்களமாவன.

> "[2]சிறப்பே நலனே காதல் வலியோ
> டந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப"

> "[3]கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்"

என்பர் தொல்காப்பியர். இதனுல் சிறப்பு முதலியவற்றை இடமாகக் கொண்டு தோன்றும் உவமையும் வேறுபடவந்த உவமத் தோற்றம்

[1] S. V. O. I. Journal XII 1. [2]தொல். உவம. 4. [3]தொல், உவம. 5.

களும் உள்ளுறைந்து இடல்லன இங்கே சிறப்பு என்று தோன்றுகின்றது. அன்றியும், உள்ளுறைஉவமத்தி னியல்பைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து 'தவலருஞ் சிறப்பின் அத்தன்மை' எனப் பாராட்டிப் பேசுவதும் இக்கருத்திற்குத் துணைசெய்வதாகும். இறைச்சி இடமாகத் தோன்றும் உள்ளுறையை இறைச்சி என்றாற் போலச் சிறப்பு முதலிய வற்றினிடமாகத் தோன்றும் உவமங்களும் வேறுபட வந்த உவமத் தோற்றங்களும் சிறப்பு என்று வழங்கப்படுகின்றன. மெய்ப்பாடுகள் பலவற்றையும் நகை என்ற முதற்குறிப்பாற் குறித்தது போலச் சிறப்பென்பதும் முதற்குறிப்பே. ஆதலின் சிறப்பு முதலாயவற்றை நிலைக் களமாகக் கொண்டு உள்ளுறையாக வருகின்ற உவமம், உவமத்தோற்றங்கள் பலவும் சிறப்பென்ற உள்ளுறையாமென்றதாயிற்று.

## உள்ளுறை யுவமமுஞ் சிறப்பும்

அங்ஙனமாயின் உள்ளுறை உவமமும் சிறப்பும் வேறு வேறு கூறியது எதற்கு? என்ற வினா எழும். இவ் விரண்டனுள்ளும் உவமஅணி உள்ளுறைந்து வருவது ஒத்ததே எனினும், திணை உணர்வகைத்தாய்த் தெய்வம் ஒழிந்த கருப்பொருளை இடமாகக் கொண்டு அகத்திற்கே சிறப்புரிமை உடையது உள்ளுறை உவமம். சிறப்பிற்கோ இவ்வரையறை இன்று.

"மனைநொடு வயலை வேழஞ் சுற்றுந்
துறைகே ழூரன்"

என்பது போல் வருவன, உள்ளுறை உவமத்திற்குரிய சிறப்பியல்புடையவாய் வருவன.

"[1]அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மாப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளி லத்த மாகிய காடே"

என்றவிடத்துக் கலை புலிப்பாற் பட்டெனச் சிறுமறி தழீஇய மடப்பிணை பறந்தலை வேளை வெண்பூக் கறிப்பது போல, நெடுஞ்செழியன் பகைவரைக் கொன்றவிடத்து அவர் தம் பெண்டிர் தம் இளம் புதல்வர்களை ஓம்புதற் பொருட்டு இறந்துபடாது அடகு தின்று உயிர்வாழ்கின்றார், என உவமை உள்ளுறைந்து நின்றபோதிலும் இதைஉள்ளுறை

[1]புறம். 23.

உவமமென்று கொள்ளார், அதற்குரிய சிறப்பியல்புடைய தன்மையின். இதுபோல் வரும் இலக்கியம் பல காணப்படுமானால் இலக்கணவாயிலாக அவற்றிற்கு அமைதி காண்பதெங்ஙனம்?

> "[1]ஏரிருக்குங் கைதை யெலாஞ் சோறிருக்க
> நீரிருக்கு மிடங்கடோறும்
> வேரிமலர்த் தேனிருக்க விவர் கூழை
> விரும்பிவந்தேன் விழுகின்றீரே.

இது சிலேடைத் துணைகொண்டு இரண்டுபொருள்களைத் தோற்றுவித்து அதன் வாயிலாக உவமையையும் உணர்விக்கின்றது. இவ்வாறு வருவனவற்றையும் உள்ளுறை உவமம் என்று கொள்ளார்.

> "[2]குருந்தம் ஒசித்தஞான் றண்டா லதனைக்
> கரந்த படிவமக்குக் காட்டாய்—மரம்பெறுப்
> போரிற் குருகுறங்கும் பூம்புனனீர் நாட
> மார்பிற் கிடந்த மறு"

இதனுள் உருவகம் உள்ளுறைந்து நிற்கின்றது. இஃதும் வேறுபட வந்த உவமத் தோற்றமாகும். இவற்றின் உள்ளுறைத் தன்மையின் விளக்கம் "[3]செஞ் சொலாற்றலாற் றோன்றுந் தொனி' என்ற தலைப்பிலும் "[4]தொனியின் தனிச்சிறப்பு' என்ற தலைப்பிலுந் தாப்பெற்றிருக்கிறது. இவ்வாறு வருகின்ற இலக்கியங்கள் பல. இவ் வுள்ளுறைகளை ஒதுக்கி இயல்வதன்று தொல்காப்பியம். இத்தகைய இலக்கியங்களையும் உள்ளுறை என்று கொள்வோமானால் இவற்றைச் சிறப்பென்று கோடலே பொருத்தமாம். இவ் வுள்ளுறைக்கு நச்சினார்க்கினியர் தருகின்ற விளக்கம் அமைவுடையதாகுமா? என்பதையும் அறிவுடையோர் ஆராய்ந்து காண்பார்களாக.

இவ்வாறுகச் சிறப்பென்ற உள்ளுறையிலும் உவமம் உள்ளுறைந்து வருவதானால் உள்ளுறை உவமம் இவ்வகையில் இதனை ஒத்ததே. ஆனால் உள்ளுறை உவமத்திற்கு அமைந்த சிறப்பியல்பு மட்டும் இதன்பால் இன்று. இத்துணையே இவ் விரண்டற்கும் வேறுபாடு. உள்ளுறை உவமத்திற் குரிய அச் சிறப்பியல்பு மட்டும் நீக்கப்பெறுமானால் இரண்டும் சிறப்பெனவே படும். இவை இவ்வாறு ஒத்தவியல்பினவாக இருக்கவும் உள்ளுறை உவமத்தைத் தனிப்படுத்தி உடனுறை, உவமம் என்றெண்ணி

---

[1]அருணைக்கலம்பகம் 98. [2]தொல். புறத். இயல் 5. நச். உரை மேற்கோள், [3]S. V. O. I. Journal, [4]S. V. O. I. Journal.

இறைச்சியோடு சேர்த்து முதற்கண் ஓதியது அவ்விரண்டும் அகத்திற்கே வருவதாய சிறப்புரிமை கருதியதேயாம். பொருளியலின் பின் வருகின்ற மெய்ப்பாட்டியலும் உவமவியலும் அகம் புறம் இரண்டிற்கும் பொதுவாக நிற்றலின் முறையே நகையும் சிறப்பும் இறுதியில் நிறுத்தப் பெற்றன. சுட்டு பொருளியலை நோக்கியதாதலின் அச் சுட்டு அகத்திற்கே உரியதாமென்று கொண்டுவிடாமல் புறத்திற்கும் வருவதாகலாம் என்பதை உணர்த்துதற்கு நகை சிறப்பு என்பனவற்றைச் சார வைத்தார். எனவே சுட்டு நகை சிறப் பென்ற மூன்றும் விளக்கங் காண்டற்குப் பொருளியல் முதலாய மூன்று இயல்களையும் நோக்கி நிற்பன வாகவும் அமைந்தன. இத்துணை நுணுக்கமுங்கண்டு இவற்றை இவ்வாறு முறைப்படுத்தி நிறுத்தி இருக்கின்ற தொல்காப்பியனாரது நூற் புணர்ப்பு நுணுக்கந்தான் எத்துணைச் சிறப்புடையதாக அமைந்து காணப்படுகின்றது?

## உள்ளுறை உவமமும் இறைச்சியும்

முன்னரே உள்ளுறை உவமமும் இறைச்சியும் அகத்திற்கேயாகி வருகின்றமை அறிந்தோம். இதற்குமேல் அவ் விரண்டிற்கும் உள்ள வேறுபாடும் காண்டல் வேண்டும். (உவமம் உள்ளுறையாக உணர நிற்பது உள்ளுறை உவமம். கொடுமையோ அல்லது அன்போ சுட்டுவது உள்ளுறையாகப் புலப்பட இயல்வது இறைச்சி.)

> "மனைநொடு வயலை வேழஞ் சுற்றும்
> துறைகே ழூரன்"

எனின் கொல்லைக்கண் உள்ளதாகியும் வயலைக் கொடி புறத்தே உள்ள நாணலைச் சுற்றிப் படர்வதுபோல, மணமனைக்கண் வைகுங் காலத்தும் பரத்தையர் திறத்துச் சூழ்கின்றான் என்று உவமை வடிவிற் புலப்படுகின்றது உள்ளுறை உவமம். 'மறப்புலி உழந்த' என்றவிடத்துத் தலைவன் செய்த கொடுமை சுட்டி நிற்கின்றது இறைச்சி. இவ்வாறு இயல்வன வாகி இவ் விரண்டும் அகத்திற்கே உரிமை உடையனவாக இவ்விரண்டையும் இவற்றின் சிறப்புரிமை நோக்கி முதற்கண் நிறுத்திவிட்டு எஞ்சிய உள்ளுறைகள் பலவற்றையும் மூன்றாகப் பகுத்து முறைப்படுத்தி இறுதியில் நிறுத்தி வைத்திருக்கின்றனர் தொல்காப்பியர். இதனாலேயே உள்ளுறையும் ஐந்தாயிற்று.

## உள்ளுறைகளும் பொருளணிகளும்

இவ் வுள்ளுறைகளைப் பொருளணிகளோடு ஒத்தனவாக எண்ணி விடுகின்றனர் சிலர். அவ்வாறு இவ்விரண்டு இனங்களையும் ஒத்த இயல் பினவாக மதிப்பது உள்ளுறைகளின் தரத்தைக் குறைத்து மதிப்பிடுவ தாகும். உள்ளுறைகளோ தரத்தில் மிக உயர்ந்தன. பொருளணிகளுள் ளும் ஒரு சிலவற்றுள் உள்ளுறை காணப்படுவது உண்டு. எனினும் உள்ளுறை தன் முதன்மையை இழக்காமல் நின்றபொழுதே அது சிறந்த உள்ளுறையாகும். இன்றேல் அது அப்பொருளணிக்கே உதவுவ தாகிவிடுகின்றது. அந்நிலையில் அது மற்றொன்றின் பண்பாயமைந்த உள்ளுறைக் குறிப்பு எனவே படும். ஆதலின் உள்ளுறை வேறு. பொருளணி வேறு. வெளிப்படையாக வருகின்ற உவமையணி வேறு, உள்ளுறையாக வருகின்ற உவமையணி வேறு என்பதை நாமறிவோம். இவ் விரண்டும் தரத்தில் ஒன்றாகுமோ? இதே நிலைதான் உள்ளுறை களுக்கும் பொருளணிகளுக்கும் உள்ள தரங்களிலும். இவ் வுண்மையை நாம் மறந்து விடக்கூடாது.

ஏனவே உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பென உள்ளுறைகள் ஐந்து என்பதும், அவை செய்யுட்கு இன்றியமையாதன என்பதும், அவற்றுள் இறைச்சியும் உள்ளுறை உவமமும் அகத்திற்கே சிறப்புரிமை பூண்டனஎன்பதும், அதனாலேயே அவை முதற்கண் நிறுத்தப்பெற்றன என்பதும், ஏனைமூன்றும் அவ் வரையறைக் குட்பட்டன அல்ல என் பதும், உள்ளுறைக்குறிப்புக்கள் பலவும் இம்மூன்று வகையுள் அடங்கு வனவே என்பதும், இறைச்சியும் உள்ளுறைஉவமமுங் கூடப் பொது வியல்பு கொண்டு நோக்குமிடத்து ஏனைய மூன்றனுள் அடங்குவனவே என்பதும், சுட்டு முதலாய மூன்றற்கும் விளக்கந்தருவன பொருளியல் முதலாய மூன்று இயல்களுமே என்பதும், இவ் வுள்ளுறைகளைப் பொரு ளணிகளோடு ஒத்தனவாகஎண்ணிவிடுதல் தகாதென்பதும், உள்ளுறை கள் தரத்தில் மிக உயர்ந்தன என்பதும் இதனால் ஒருவாறு உணர்த்தப் பட்டனவாம்.

# கம்பரும் துளஸிதாஸரும்-ரு

ஸ்ரீ. தி. சேஷாத்திரி அவர்கள், M. A., ஆசிரியர், மதுரைக்கல்லூரி.

(49-வது தொகுதி 255-வது பக்கத்தொடர்ச்சி)

### அண்ணல் பிறந்தார்

முப்பொருளுக்கும் முதல்வனும் பரமன் திகிரியும் சங்கமும் பாயலும் இளைஞர்களாகிவர, மன்னர்மன்னனும் தயரதனுடைய திருக்குமாரராக வந்தவதரித்தது யாவரும் அறிந்ததே. அரசனையன்றி ஏனைய மக்களும் அந்த வைபவத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார்கள். அந்தப் பெருமையையும் மக்கள் கொண்டுள்ள அன்பையும் ஆனந்தத்தையும் இரண்டு மகாகவிகளும் விரிவாகக் கண்டு களிக்கின்றனர். கவியரசராம் கவிக்கும், பக்தரில் பெரியவராம் கவிக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு.

அந்த வருணனையினூடே கம்பநாடர் பின்வரும் செய்யுளால் மக்கள் உவகையை வெளியிடுகிறார்.

> பண்ணையும் ஆயமுந் திரளும் பாங்கரும்
> கண்ணகன் திருநகர் களிப்புக் கைமிகுந்து
> எண்ணெயுங் களபமும் இழுதும் நானமும்
> சுண்ணமும் தூவின வீதி தோறுமே.

[பண்ணை-மகளிர் கூட்டம்; ஆயம்-தோழியர் கூட்டம். திரள் ஆடவர் கூட்டம்; பாங்கர்-தோழர் கூட்டம்; களபம்-சந்தனம்; இழுது-நெய்; நானம்-கஸ்தூரி.]

இந்தப் பாட்டை நன்கு மனத்தில் இருத்தி துளஸிதாஸருடைய இந்த இரண்டு 'சௌபாயீ' அடிகளையும் கவனிப்போம்:

> ம்ருகமத சந்தன குங்கும கீஞ்சா
> மசீ ஸகல வீதின பிச கீசா

இ—ள். மக்கள் கஸ்தூரி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றைத் தூவ எல்லாத் தெருக்களிலும் சேறு மண்டிவிட்டது என்பதாம்.

மீண்டும் கம்பநாடர் கவியை உற்றுநோக்குழி, அங்கே தூவப்பட்ட பொருள்கள் கூறப்பட்டுள்ளன; ஆனால் அதன் பலனைத் தெருக்கள் என்ன ஆயின என்று சொல்லப்படவில்லை; துளஸிதாஸரோ வீதிகள் சேறாயின என்றாராயினும் சேறு மண்டுவதற்கான பொருள்களின் முழுப்பட்டியலையும் தந்தாரில்லை.

கம்பநாடர் மிதிலைக்காட்சிப்படத்தில் ஒரு பாடல் எழுதியிருக்கிறார்.

தாறுமாய் தருகட் குன்றத் தடமத அருவி தாழ்ப்ப
ஆறுமாய்க் கலின மாவி லாழியால் அழிந்தோ ராறாய்
சேறுமாய்த் தேர்க ளோடத் துகளுமாய் ஒன்றோ டொன்று
மாறுமா றாகி வாளா கிடக்கிலா மறுகிற் சென்றார்.

[தாறு-இருப்பு முள்; தருகட் குன்றம்-யானைகள்; கலின மா-கடிவாளம் பூட்டிய குதிரை; விலாழி-வாய்நுரை; மறுகு-வீதி]

இந்தப் பாட்டில் தறுகண் யானைகளின் மதநீர் ஆறாகிறது. குதிரைகளின் வாய்நுரைப் பெருக்கத்தால் அந்த ஆறு மீண்டும் மோராறாகிறது. அதுவே சேறுமாகிறது.........என்று கம்பநாடர் வீதியைக் குறிக்கின்றார். இந்தஇடத்தில் இவ்வளவு உன்னிப்பாக, திரவப் பொருளின் பெருக்கத்தால் வீதி சேறானவாற்றைச்சொன்னவர் அங்கே எண்ணெயையும், நெய்யையும் ஊற்றியதோடல்லாமல் கஸ்தூரி, சந்தனம் சுண்ணத்தையும் கொட்டியும் வீதி சேறானதாகச் சொல்லவில்லை. துளஸிதாஸரோ வீதி சேறானதைச் சொல்லியும் சேறுவதற்கு உரிய பொருள்களில் மிக முக்கியமான இரண்டு பொருள்களைச் சொல்லாது விடுத்தார். இந்த இரு பாடல்களையும் ஊன்றிப் பார்க்குங்கால் இந்த இருவரும் சேர்ந்தே தான், அல்லது ஒருவரை ஒருவர் அறிந்தே தான் முன்னவர் விட்டதைப் பின்னவர் கூட்டி எழுதினரோ என்ற ஐயம் எழாமல் போகாது. துளஸிதாஸரைமட்டும் படித்தால் மனத்தில், சுண்ணமும் நானமும், களபமும் மட்டும் தூவப்பட்டிருந்தால் வீதிகள் சேறு 'மண்டுமோ' என்ற கேள்வி எழத்தான் எழும். கம்பநாடர் கவியையும் உடனே நினைவு கூர்ந்தால், இழுதையும் எண்ணெயையும் சேர்த்தே தூவினர் மக்கள் என்ற விடை கிடைக்கும்.

இங்கே பெரியாழ்வார் கண்ணன் பிறந்த குதூகலத்தை அனுப விக்குங்கால், அவரும், எண்ணெயும் சுண்ணமும் தூவி அதனால் முற் றம் அளக்காரானதை அழகாக வருணித்திருக்கிறார் என்பதையும் நினைவு கூரலாம்.

வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்தளறாயிற்றே.

இந்தப் பாவிலிருந்து பொருள்கள் தூவப்பட்டதும் அதனால் வீதி கள் அளக்கரானதும் நன்கு தெளிவாகின்றபடியால், இனி கம்பநாடரும் துளஸிதாஸரும் அந்தக் கருத்தைத்தான் முன்னும் பின்னுமாகச் சொல்லுகிறார்கள் என்று துணிகிறோம்.

மீண்டும் இருவரும் 'வீதி' என்ற சொல்லையே கையாண்டிருப்ப தும் ஒரு விசேடமாகும். மறுகு, தெரு என்றெல்லாம் சொற்கள் உள வாகக் கம்பர் வீதி என்ற சொல்லை இங்கே எடுத்தாண்டார். அதே கருத்தைச் சொல்ல வந்த துளஸிதாஸரும் அந்தக் கவிக்கு இணக்கமா கச் செய்யுள் அமைத்ததனால்தானோ அதே சொல்லைத் தன் கவியிலும் கொண்டுள்ளார் என்ற ஓர் எண்ணம் தோன்றுகிறது. எவ்வாறாயினும் துளஸிதாஸர் மூன்று பொருளைச் சொல்லி முடிவைச் சொன்னதும் கம்பர் ஐந்து பொருள்களைச் சொல்லி முடிவைச்சொல்லாமல் விட்டதும் கம்பர்-துளஸியிடம் ஈடுபாடுடையவர் மனத்தைக் கவராமல் போகாது.

## நாமம் விதிப்ப மதித்தான்

குழந்தைகள் பிறந்து நாட்கள் ஆகிவந்தன. யாரும் களிமிகுதி யால் அதை அறியவில்லை. ஏன், ஒன்றையுமே அறியவில்லை. கம்ப நாடர் 'இத்தகை மாநகர் ஈராறு நாள் சித்தம் உறுங் களியோடு தத்தமை ஒன்றும் உணர்ந்திலர்' என்று குறிக்கிறார். 'ஈராறுநாள்' என்று கம்பரும் சிலநாள் என்று துளஸியும் கூறுவர். ஒன்றும் உணர்ந் திலர் என்கிறார் கம்பநாடர். துளஸிதாஸர் இரண்டு அதிசயங்களைக் கூறி ஒன்றையும் அறிந்திலர் மக்கள் என்கிறார். அவ்வதிசயங்களில் ஒன்று சூரியதேவன் தான் அஸ்தமிக்கவேண்டியதை மறந்து சில நாள் தங்கிவிட்டானும். ஒருவரும் அறியவில்லை. பகல் போனது தெரிந்தால்தானே இரவு வந்தது தெரியும். இரண்டும் கடப்பது

அறிந்தாலன்றோ நாள் கழிந்ததை அறிவர் மாந்தர். சூரியன் எப்படித் தங்கினன்? என்பது கேள்வி. மக்கள் அதற்கு வசதி செய்து கொடுத்துவிட்டனர் என்கிறார் துளஸிதாஸர். சூரியன் இல்லாமலே பகலையும், சூரியன் இருக்கும்போதே இரவையும் மக்கள் தம் களிமிகுதியில் ஆக்கி நிறுத்திவிட்டனர். அங்கங்கே ஒளிவிரி விளக்கங்களை எல்லை மீறி ஏற்றிவைத்தனர்; அகில் முதலிய நறுமணப் புகைகளைக்கொண்டு ஊர் முழுவதையும் இருட்டாக்கிவிட்டனர், பிறகு சூரியனை யார் தேடுவர்? இருப்பது இல்லாததை யார் அறிவர்!

மற்றொரு அதிசயம்; பரமசிவனும் காகுபசுண்டி என்ற முனிவரும் மனிதஉரு எடுத்து வந்து அயோத்தி மாநகரில் சிலநாள் அலைந்தனராம். இந்த இரண்டையும் மக்கள் அறியவில்லை. சித்தமுறுங் களியோடு தம்மை மறந்த மக்கள் "ஒன்றையும்" அறிந்திலர் என்று கம்பநாடர் கூறியதில் 'ஒன்றையும்' என்பதற்கு விளக்கவுரை கிடைத்துவிட்டதல்லவா?

அதற்குமேல் கம்பநாடர் சொல்லும் கதை இது. செய்யுள் முழுவதையுமே எழுதிவிடுகிறேன்.

இத்தகை மாநக ரீரறு நாளும்
சித்த முறுங்களி யோடு சிறந்தே
தத்தமை யொன்று முணர்ந்திலர் தாவா
மெய்த்தவ னும்மம் விதிப்ப மதித்தான்

ஒன்றும் உணர்ந்திலாக மாநகர்மாந்தர் நாள்செலவிடும்போது தாவா மெய்த்தவரான வசிட்டர் நாமம் விதிப்ப எண்ணினர்.

துளஸிதாஸர் இதே கதையைச் சொல்லும் விதம் இது.

கசுக திவச பீதே யஹி பாந்தி
ஜாத ந ஜானஹிம் தின அரு ராதி
நாம கரண கர அவஸர ஜானி
பூப போலி படயே முனி ஞானி

சில நாட்கள் இவ்வண்ணம் சென்றன. பகல்—இரவை மக்கள் அறியவில்லை. பெயர்வைக்க நாள் வந்ததை அறிந்து, அரசன் ஞானியான முனிவரை அழைத்தான்.

கம்பநாடர் விதிப்ப மதித்தான் என்று சொல்லியதும் உடனடியாகச் சொல்லும் செய்யுள் இது:

சராமலை யத்தளர் கைக்கரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்தான்
விராவி யளித்தருள் மெய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய ரீய்ந்தன னன்றே.

இதனால் வசிஷ்டர் பெயர் ஈந்த கதை சொல்லப்படுகிறது.

இதனிடையே நிகழ்ந்த செயலைக் கம்பர் கூறாது விடுத்தார். நிற்க, துளஸியின் கதைத்தொடரை நோக்குவோம்.

கரி பூஜா பூபதி அஸ பாக்கா
தரிய நாம ஜோ முனி குனி ராக்கா

தக்கபடி பூஜித்து அரசன் இவ்வாறு சொன்னான். ஏற்கெனவே தாங்கள் முடிவுசெய்து வைத்திருக்கும் பெயர்களை ஈயுங்கள் என்றான்.

இருவர் கூறுவதையும் கவனித்தபிறகு எப்படி ஒரே கதையை இருவரும் மாறி மாறி ஒருவர் விட்டதை ஒருவர் சொல்லிச் செல்கின்றனர் என்பது நபம்பட விளங்குகின்றது.

கம்பநாடர் வசிஷ்டர் எண்ணியதைச் சொல்லியவர், பிறகு அவர் அரண்மனைக்கு வந்ததைச் சொல்லவில்லை. அரசன் அழைத்தானென்றும் சொல்லவில்லை.

துளஸியோ அரசன் அழைத்ததைச் சொன்னார்; வசிஷ்டரை நாமகரணம் செய்யும்படி வேண்டிக் கொண்டதையும் கூறினார்; என்றால் வசிஷ்டர் ஏற்கெனவே முடிவுசெய்து இருந்தார் என்ற கூற்று என்ன ஆவது? துளஸிக்கு அதில் மெப்பாடு உண்டா இல்லையா? என்பது கேள்வி. அதற்கு விடை அரசன் விடுக்கும் வேண்டுகோளில் அமைந்திருக்கிறது. 'நீங்கள் ஏற்கெனவே சூட்டவேண்டும் என்று ஆய்ந்து வைத்துள்ள பெயர்களைக் குழந்தைகளுக்கு இடுங்கள்' என்கிறான் அரசன். வசிஷ்டர் எண்ணிய கதை துளஸியின் இராமாயணத்தில் காணப்பெற்றிலது. அரசன் அழைத்த கதை கம்பநாடரால் குறிக்கப்பெற்றிலது. ஆயினும் அரசன் அழையாமல், அரசன் இருக்கைக்கு வாராமல் பெயர் இடுதல் நடவாத செயலாம். அதேபோல் அரசன் அழைத்த பிறகுதான் வசிஷ்டர் தம்கடமையை உணர்ந்திருக்கவேண்டும் என்பதும்

சரியாகாது. ஆகவே இந்த இரு இராமாயணத்தையும் சேர்த்துப் படித்த பிறகல்லவோ ஒருவருக் கொருவர் எவ்வளவு நெருங்கியிருக்கின்றனர் என்ற ஆச்சரியம் வெளியாகிறது!

வசிஷ்டர் பெயரிட எண்ணியது, அரசன் அவரை அழைத்தது, அவன் வேண்டுகோளும் தன் பிரியமும் ஒன்றாக ஞானமுனி பெயரிட்டது, இந்த மூன்று நிகழ்ச்சிகளை இரு மஹாகவிகளும் எதற்காகப் பங்கிட்டுக்கொண்டு சொல்லவேண்டும்? சொலலும்வகையிலும் ஒருவர் கருத்து மற்றவர் சொல்லும் கதையில் பொதிந்திருக்கும் வண்ணம் சொல்லவேண்டும்? ஆச்சரியம்!

## புகறு மறையால் இசைத்த பெயர்கள்

அரசன் விரும்பியவாறே வசிஷ்டர் குழந்தைகள் நால்வருக்கும் பெயர்சாற்றினர். தாம் ஏற்கெனவே விதிப்ப மதித்திருந்த பெயர்களை ஈந்தனர். காமலைந்த காலத்தில் ஏய்த்த கைக்கரி அராவணையில் துயில்வோய்! என்று அலறவும் அந்நாள் விராவி யளித்த மெய்ப்பொருளுக்கு இராமன் எனப் பெயரும், மெய்நெறி கண்ட வரதன் உதித்திட அவனுக்கு பரதன் என்ற பெயரும், மொய்ம்பின் விளக்கொளியாய் நின்றவனுக்கு இலக்குவன் என்ற பெயரும், எத்திறத்துங்கெடும் என்ன நின்ற கடைக் குழந்தைக்குச் சத்துருக்கன் என்ற பெயரும் சூட்டப்பட்டன.

இப் பெயர்களை வசிஷ்டர் எவ்வாறு கொண்டார்? ஏதோ தோன்றிய பெயர்களை வைத்து அழைத்தாரா? அல்லது எங்கிருந்தாவது தேர்ந்தெடுத்தாரா? என்றால் இக் கேள்விகளுக்கு ஐயம் திரிபற்ற முறையில் கவிகள்கவியாம் கம்பநாடரும், பக்தருள் கவியாம் துளஸிதாஸரும் கூறியுள்ளார்.

விதிப்ப, தாவா மெய்த்தவன் என்ற இரு சொற்களாலும் மறைவாகக் குறிப்பிட்ட ஒரு கருத்தைக் கம்பநாடர்

> பொய்வழி யின்முனி புகறு மறையால்
> இவ்வழி பெயர்க ளிசைத்து

என்று மேலே கூறி நிலைநிறுத்திவிட்டார். ஆயினும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் ஆழ்ந்த அந்தக் கருத்துத் தெளியாமல் போகவும் வாய்ப்பு உண்டு.

முனிவர் முன்னரே சொல்கிற வேதமுறைப்படி இவ்வாறு பெயர்கள் இசைத்தார் என்ற வாக்கியத்தில் 'புகல்தரு' இசைத்தான் என்ற சொற்களின் வலிமையையும் உணர்ந்தால் அந்தக்கருத்துத் தெளிவாகி விடும்.

வேதமுறைப்படி 'நாமகரணம்' செய்தார்! என்பது மட்டுமல்ல பொருள். பெயர்களே வேதம் தந்தன! என்பதுதான் அந்தக்கருத்து. காட்டித் தருகின்ற மறையின்கண் ஆய்ந்தெடுத்த பெயர்களே அவைகள். 'இசை' என்பதற்குச் 'சேர்' என்ற கருத்து உளதாதலால் குழந்தைகளின் குணத்தையும் அக் குணத்துக்கு வேதத்தில் உள்ள பெயர்களையும் தேர்ந்து எடுத்து, குழந்தைகளையும் பெயர்களையும் இசைத்தான் என்று கொள்ளல் வேண்டும். இவைகள் வேதப்பொருள்கள் என்று உணர்ந்து அந்தப் பொருள்களுக்கு உரிய பெயர்களையும் ஆய்ந்து எடுக்க, தெளிந்து நிரம்பிய வேதஞானமும் பொய்வழி இல்லாத மெய்வழித் தவமும் உடைய ஒருவரால்தான் முடியும் என்பது வெளிப்படை. அந்த மாட்சி உடையவர் வசிஷ்டர்தான் என்பதனால்தான் கம்பநாடர் தாவா மெய்த்தவன் பொய்வழியில் முனி என்றெல்லாம் அடைமொழியிட்டு வசிஷ்டரைக் குறிக்கிறார்.

துளஸி இந்தக் கருத்தை வெளிப்படையாகவே குறித்து இருக்கிறார். ஞானியான முனிவர் என்ற கூற்றிலே மெய்ஞ்ஞானியாம் வேதமாய்ந்தவர் வசிஷ்டர் என்ற கருத்தைக் குறித்துவிட்டு, அவர் பெயரீந்ததைச் சொல்லும் முறையில் ஒவ்வொருவருக்கும் இடப்பட்ட பெயரையும் காரணத்தையும் சொல்லிவந்தவர், சத்துருக்கனன் பெயரைச் சொல்லியவுடன் 'வேதப்ரகாசா!' என்று சுட்டுகிறார். 'வேதம் பிரகாசம் செய்த பெயர்!' என்று அதன் பொருளாகும். அந்த அடைமொழி நான்கு பெயர்களுக்கும் உரியது.

ஆகவே இரண்டு கவிகளும் சேர்ந்து ஒருமுகமாகத் தம்தம் முறையில் வசிஷ்ட முனிவர் நாமகரணம் வேதமுறைப்படி செய்தார் என்ற கருத்தையும் சொல்லி, பெயர்களையும் புகல் தரு வேதங்களிலிருந்து தேர்ந்தெடுத்து இசைத்தார் என்று கூறுகின்றனர். கூறும் வண்ணம் கனி சிறந்தது. அதிலும் இருவரும் சேர்ந்து கூறும் விதம் இறும்பூது பயப்பதாம்.

# வளருந் தமிழ்

வித்துவான் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம்அவர்கள், M A, கொழும்பு.

(முன் 49-வது தொகுதியின் 146-ம் பக்கத் தொடர்ச்சி)

## கி. பி. நாலாம் ஐந்தாம் நூற்றுண்டுகள்

இக் காலத்திலே தமிழகத்தின் பெரும்பகுதி களப்பிரர், பல்லவர் என்னும் அரசர்களுடைய ஆட்சிக்குட்பட்டு அவலப்பட்டது. இதனுலேயே இக் காலத்தில் சிறந்த தமிழ்நூல்கள் தோன்றவில்லை போலும். தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த அளவில் இக் காலத்தின் பெரும்பகுதி இருட்காலமாகவே காணப்படுகிறது. ஐந்தாம் நூற்றுண்டின் இறுதியில் [1]வச்சிரநந்தி என்னும் சமணமதத் தலைவர் ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவினுர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள்ளே சமணப் புலவர்களால் இயற்றப்பட்ட சில நூல்கள் இச் சங்ககாலத்திலே தோன்றியிருக்க வேண்டும். சமண சமயம் தமிழ்நாட்டில் நிலைபெற்று ஓங்கிற்று. வடசொற்கள் அளவின்றித் தமிழிலே புகுந்தன. சைவ சமயமும் வைஷ்ணவ சமயமும் ஆரியத் தொடர்பு பெற்றன.

## ஆரும் நூற்றுண்டு

வச்சிரநந்தி தொடங்கிய தமிழ்ச்சங்கம் ஆரும் நூற்றுண்டின் முற்பகுதியில் முடிவுற்றது. இத் தமிழ்ச்சங்க காலத்திலே தோன்றிய நூல்களுள்ளே மிகச் சிறந்தது, கொங்குவேளிர் என்பார் இயற்றிய பெருங்கதை எனும் காவியமாகும். இது கொங்குவேள் மாக்கதை எனவும்படும். இதன் அருமை பெருமைகளை அறிந்த மக்கள் இதனைச் சிறந்த நூல்களாகிய சிந்தாமணி, கம்பராமாயணம், திருக்குறள் முதலியவற்றுடன் சேர்த்துப் போற்றினுர்கள்[2]. திருமூலர் திருவாய்மலர்ந்த திருமந்திரமும், கல்லாடர் இயற்றிய கல்லாடமும்[3] வாகீசமுனிவர் இயற்றிய ஞானமிர்தமும் இந் நூற்

---

[1]இ. பி. 479இல்.

[2]திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேம் குறளனுகேம்
எங்கெழில்என் ஞாயி றெமக்கு.

[3]கல்லாடம் பத்தாம் நூற்றுண்டிலே தோன்றிய தென்பாருமுளர்.

றாண்டுக்குப் பெருமையளிக்கும் சைவப் பெருநூல்களாகும். பதினோராந் திருமுறைகளுள் ஒன்றாகிய சிவத்தளி வெண்பாவும் இந் நூற்றாண்டிலே ஐயடிகள் காடவர்கோன் என்னும் பல்லவ அரசரால் பாடப்பட்டது. அற்புதத் திருவந்தாதி, இரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதலிய பிரபந்தங்களைப் பாடிய காரைக்காலம்மையாரும் இந் நூற்றாண்டினரே. இந் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்துதான் இரட்டைமணிமாலை, உலா, பரணி முதலிய சிறு காப்பியங்கள் பெருகத் தொடங்கின.

## ஏழாம் நூற்றாண்டு

இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிநாடு களப்பிரர் ஆட்சியிலிருந்து பாண்டியர் ஆட்சிக்குள் மீண்டும் வந்தது. ஆனால் சோழநாடு முழுதும் களப்பிரர் கையிலிருந்து பல்லவர் ஆட்சிக்குட்பட்டது; தமிழ்நாடு சமண சமயத்தின் ஆதிக்கத்துக்குட்படச் சைவ சமயமும் வைஷ்ணவ சமயமும் கீழ்நிலையடைந்தன.

மதமாற்றமும் மதப்பூசலுமே மக்கள்மனத்தை இழுத்தன. சமண சமயத்தைச் சைவ வைஷ்ணவ சமயங்கள் ஒன்றுபட்டு எதிர்த்தன. இதனால் இந் நூற்றாண்டிலும் இதனை அடுத்த சில நூற்றாண்டுகளிலும் சமயச் சார்பான நூல்களே தமிழ்நாட்டிற் றோன்றின. இந்த நூற்றாண்டைத் தேவார நூற்றாண்டென்றுகூடக் கூறலாம். திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சைவசமயத்துக்குப் புத்துயிரளித்துத் தேவாரங்களைப் பாடினர். இந்த நூற்றாண்டு முதலாகவே தமிழ்க்கல்வெட்டுக்களும் செப்பேடுகளுங் கிடைக்கின்றன.

## எட்டாம் நூற்றாண்டு

நாலாயிரப் பிரபந்தத்தைப்[1] பாடிய ஆழ்வார்களுள்[2] காலத்தால்

---

[1]நாலாயிரப் பிரபந்தம்:— முதலாயிரம் திருமொழி எனவும் இரண்டாவதாயிரப் பெரிய திருமொழி எனவும் மூன்றாவதாயிரம் இயற்பா எனவும் நான்காவதாயிரம் திருவாய்மொழி எனவும் படும்.

[2]ஆழ்வார்கள் பன்னிருவரையும் பின்வரும் வெண்பா குறிப்பிடுகிறது.

பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசை
ஐயனருள் மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன் அன்பர் தாட்டுளி நற்பாண நற்கலியன்
ஈதிவர்தோற் றத்தடைவாம் இங்கு.

மூர்த்தியவர்களாகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் எனும் மூவரும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்து வைஷ்ணவ சமயத்தைப் பொலியச் செய்தனர்[1].

இவர்களின் பின்னர் வைஷ்ணவ சமயத்தலைவராக இந் நூற்றாண்டில் விளங்கியவர்கள், திருமங்கை ஆழ்வாரும் தொண்டரடிப் பொடி ஆழ்வாருமாவர்[2]. கர்ண பரம்பரையாக வந்த இறையனார் அகப்பொருளுரையும் எழுத்து வடிவத்தை இக்காலத்தில் அடைந்தது. ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலையும் இக் காலத்ததே. திவாகரரால் இயற்றப்பட்ட திவாகரமும் அவர் மகன் பிங்கல முனிவரால் இயற்றப்பட்ட பிங்கலந்தையும் இந் நூற்றாண்டிலே புதுமுறையிற் றோன்றிய நிகண்டு நூல்களாகும்.

## ஒன்பதாம் நூற்றாண்டு

சைவ சமயாசாரியர்கள் நால்வருள்[3] காலத்தாற் பிந்தியவர் ஆகிய சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்களைப் பாடியும், திருத்தொண்டத் தொகை இயற்றியும் சைவசமயப் பணியாற்றினார். திருவாய்மொழியைத் தந்தருளிய நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும், அவர் மகள் ஆண்டாளும் வாழ்ந்த காலமும் இஃதே. ஞானவுலா, பொன்வண்ணத்தந்தாதி, மும்மணிக்கோவை முதலியவற்றைப் பாடிய சேரமான் பெருமாள் நாயனாரும் இந் நூற்றாண்டுக்குச் சிறப்பளித்தார். பெருந்தேவனார் இயற்றிய பாரதவெண்பா பாரதக் கதையை உரையிடையிட்ட பாட்டுக்களால் தமிழ்மக்களுக்கு எடுத்துக் கூறிற்று.

“நந்தி கலம்பகத்தான் மாண்ட கதை நாடறியும்” என்று சிவஞானமுனிவர் குறிப்பிட்ட நந்திக் கலம்பகமும்[4] ஐஞ்சிறு காப்பியங்களுள்[5] ஒன்றாகிய சூளாமணியும் இக் காலத்திலெழுந்த சிறந்த

---

[1] சங்கராச்சாரியாரும் இக் காலத்தவரே.

[2] இவர்களைப் பல்லவர் காலத்துக்கு, அஃதாவது கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்கள் என்பாருமுண்டு.

[3] சைவசமயாசாரியர்கள்:—1. திருநாவுக்கரசர். 2. திருஞானசம்பந்தர். 3. சுந்தரமூர்த்தி நாயனார். 4. மாணிக்கவாசகர்.

[4] இக்கலம்பகத்தைக் குலமகன் பாடினான் என்பர்.

[5] ஐஞ்சிறு காப்பியங்கள்:—1. சூளாமணி. 2. நீலகேசி. 3. யசோதர காவியம். 4. நாககுமார காவியம். 5. உதயணகுமார காவியம்.

இலக்கிய நூல்களாகும். இந்த நூற்றுண்டின் இறுதியிலே பல்லவ ராச்சியம் வலிகுன்றி ஒடுங்கச் சோழப் பேரரசு சிறந்தோங்கிற்று.

## பத்தாம் நூற்றுண்டு

இந்த நூற்றுண்டிலே சமணப் புலவர்களை மைசூர் அரசர்கள் ஆதரித்தனர். ஐம்பெருங்காப்பியங்களுள்ளே[1] இரண்டாகிய வளையாபதியும் குண்டலகேசியும் இந்நூற்றுண்டுத் தொடக்கத்தில் தமிழ்மக்களுக்கு இலக்கிய விருந்தளித்தன. இவற்றிற்குப்பின்னர்த் திருத்தக்கதேவர் இயற்றிய சிந்தாமணியைச் சிறந்த செந்தமிழ்க் காப்பியமாகத் தமிழ்நாடு கொண்டாடிற்று. இந்த நூற்றுண்டிலும் இதனை அடுத்த நூற்றுண்டுகளிலும் வடமொழி இலக்கணப் போக்கினைத் தழுவி யாப்பணி இலக்கண நூல்கள் தமிழிலே எழுதப் பட்டன. அமிர்தசாகரர் இயற்றிய யாப்பருங்கலமும் யாப்பருங் கலக் காரிகையும் இந் நூற்றுண்டிலே தோன்றியனவாகும்.

சோழ அரசர்கள் சிறந்தோங்கவே தமிழுஞ் சைவமும் தழைத் தோங்கத் தொடங்கின. இந் நூற்றுண்டு முதல் பதின்மூன்றும் நூற்றுண்டினிறுதிவரை சோழ அரசு வலிமைபெற்று விளங்கிற்று. இந் நூற்றுண்டுகளிற் பல தமிழ் நூல்கள் தோன்றின. சங்ககாலத் தின் பின் இக் காலமே தமிழ் வளர்ச்சியிலே பொற்காலமாகத் திகழ் கின்றது. சங்ககாலத்திலே வடமொழியின் ஆதிக்கம் தமிழ்மொழி யிலே புகவில்லை. ஆனால் இக்காலத்திலே வடமொழியின் ஆட்சி தமிழ் இலக்கியத்திலும் தமிழ் மக்களுடைய சமயத்திலும் நிலை பெறத் தொடங்கிற்று. சோழ அரசர்கள் வடநாட்டிலிருந்து பிராம ணர்களைக் கொணர்ந்து தமிழ்நாட்டுக் கோவில்களிலே குடியிருத் தினர். வடமொழிநூல்கள் பல தமிழிலே மொழிபெயர்க்கப் பட் டன. இவற்றுள் புராண நூல்கள் விசேடமாகக் குறிப்பிடத் தக் கன. வடசொற்கள் தமிழிலே அளவின்றிப் புகத் தொடங்கின. தமிழ் இலக்கணத்தை வடமொழி இலக்கணத்தோடு சேர்த்தும் விட முயன்றனர்[2].

---

[1] ஐம்பெருங்காப்பியங்கள் :— 1. சிலப்பதிகாரம். 2. சிந்தாமணி. 3. மணிமேகலை. 4. வளையாபதி. 5. குண்டலகேசி.

[2] தண்டியலங்காரம், வீரசோழியம் முதலியன இம்முயற்சியினைப் புலப் படுத்துகின்றன.

சோழ அரசர்கள் இந் நூற்றாண்டிலே சைவசமயத்தைப் போற்றி வளர்த்தனர். நம்பியாண்டார் நம்பி தேவார திருவாசகங்கள் முதலியவற்றைத் திருமுறைகளாக[1] வகுத்தார். இவர், திருத்தொண்டர் திருவந்தாதியினையும் பதினோராந்திருமுறைகளிலுள்ள வேறு ஒன்பது நூல்களையும் பாடி யருளினார். பதினோராந் திருமுறையுள் அடங்கிய கோயில்நான்மணிமாலை முதலிய ஐந்து பிரபந்தங்களைப் பாடிய பட்டினத்துப் பிள்ளையாரும் இக்காலத்தவரே. ஒன்பதாந் திருமுறைகளாகிய திருப்பல்லாண்டைப் பாடிய சேந்தனாரும் திருவிசைப் பாக்களைப் பாடியவர்களுள் கருவூர்த்தேவர், திருமாளிகைத்தேவர், கண்டராதித்தர் முதலியோரும்[2] வாழ்ந்தது இந் நூற்றாண்டிலேயாகும்.

[தொடரும்]

---

[1] பன்னிருதிருமுறைகள்:—1-3. சம்பந்தர் தேவாரங்கள். 4-6. அப்பர் தேவாரங்கள். 7. சுந்தரர் தேவாரங்கள். 8. திருவாசகமும் திருக்கோவையாரும். 9. திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும். 10. திருமந்திரம். 11. நாற்பது பிரபந்தங்கள் (பதினொருவர் பாடியன). 12. பெரியபுராணம். இவற்றுள் நம்பியாண்டார் நம்பி வகுத்தது முதற்பதினொன்றுமே யாகும். பெரியபுராணம் பின்னர்ச் சேர்க்கப்பட்டது.

[2] திருவிசைப் பாக்களைப் பாடினோர் ஒன்பதின்மர். மற்றையோர்:— 1. சேந்தனார் (திருப்பல்லாண்டைப் பாடியவர்). 2. பூந்துருத்திநம்பி காடவநம்பி. 3. வேணாட்டடிகள். 4. திருவாலியமுதனார். 5. புருடோத்தம நம்பி. 6. சேதிராயர்.